செ.வெ.எண்:36 நாள்: 18.08.2019

**கரூர் மாவட்டம்**

**நஞ்சைக்காலக்குறிச்சி ஊராட்சியில் சுகாதாரத்துறையின் சார்பில் நடத்தப்பட்ட சிறப்பு மருத்துவ முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் குடிமராமத்து திட்டத்தின் கீழ் அமரவாவதி வடிநிலக்கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாய்க்கால்கள் துூர்வாரும் பணிகள் மற்றும் கரைகள் பலப்படுத்தும் பணிகளை ஆய்வு செய்யும் வகையில், அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நஞ்சைக்காளக்குறிச்சி வாய்க்காலைப் பார்வையிட நேற்று(17.08.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆ.ப., அவர்கள் சென்றார்கள். அப்போது, நஞ்சைக்காளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தொடக்கப்பள்ளியில் பொது சுகாதாரத்துறையின் சார்பில பொதுமக்களுக்கான சிறப்பு மருத்துவக முகாம் நடைபெற்று வந்தது.

இதனைப்பார்த்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், சிறப்பு மருத்துவமுகாமில் திடீர் ஆய்வு செய்து, அங்கு வந்திருந்த பொதுமக்களிடம் இங்கு அளிக்கப்படும் சிகிச்சை மற்றும் பரிசோதனைகள் பயனுள்ள வகையில் இருக்கின்றதா என்று குறித்து கேட்டறிந்தார்.

இந்த முகாமில், பொதுமக்களுக்கு இரத்தப்பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை, கண் பரிசோதனை, இசிஜி, கர்ப்பினித்தாய்மார்களுக்கு ஸ்கேன், சித்த மருத்தவப்பிரிவு உள்ளிட்ட பல்வேறு வகையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், மழைக்காலங்களில் மழைநீர் தேங்குவதால் டெங்கு பரவும் விதம் குறித்தும், கொசுக்கள் உற்பத்தியாகாமல் தடுக்கும் முறை குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கும் வகையில் காட்சிப்பொருட்கள அமைக்கப்பட்டிருந்ததைப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வட்டார மருத்துவர் திரு.அருண்குமார் தலைமையிலான மருத்துவர்களையும், செவிலியர்களையும் சுகாதாரப் பணியாளர்களையும் பாராட்டினார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.